# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2417/15 - 2024 දෙසැම්බර් මස 31 වැනි අඟහරුවාදා - 2024.12.31

*2417/15 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.3/2013*(ii)

**1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம்**

*1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் சொல்லப்பட்ட சட்டத்தின் 321 ஆம் பிரிவின்கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**பிமல் நிரோஷன் ரத்நாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2024.12.30.*

**ஒழுங்குவிதிகள்**

1. (1) இவ்வொழுங்குவிதிகள் 2024ஆம் ஆண்டு 2ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் (நீர்ப்பரப்புகளை வகுதிப்படுத்துதல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இவ்வொழுங்குவிதிகள், 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந்தேதிய 2417/16 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் வணிகக் கப்பற்றொழில் (கலனின் வகுப்பாக்கமும் சான்றுப்படுத்துகையும்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 2ஆம் ஒழுங்குவிதியில் வகுதிப்படுத்தப்பட்டவாறான எல்லாத் தொகுதியினவையுமான கலன்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.


1A – PG 6974 – 05 (2025/01)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. வகுதிப்படுத்தல்களானவை, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டம் ஏற்புடையதாகும் நோக்கங்களுக்காக இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட கலன்கள் எந்த நீர்ப்பரப்புகளில் தொழிற்படவேண்டுமோ அந்த நீர்ப்பரப்புகளை வரையறுத்துக்கூறுகின்றன.

3. இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட கலன்கள் எந்த நீர்ப்பரப்புகளில் தொழிற்படவேண்டுமோ அந்த நீர்ப்பரப்புகள் பின்வருமாறு வகுதிப்படுத்தப்படுகின்றன:-

(அ) கடல்செல் - சர்வதேச;
(ஆ) கரையோர நீர்ப்பரப்புகள்;
(இ) வெளிக்காட்டப்பட்ட நீர்ப்பரப்புகள்; அத்துடன்
(ஈ) உள்ளக நீர்ப்பரப்புகள்.

4. மேலே ஒழுங்குவிதி 3 றில் வகுதிப்படுத்தப்பட்டவாறான கடற்பிரதேசங்கள், இதற்கான அட்டவணைகள் I, II மற்றும் III என்பவற்றிற் குறித்துரைக்கப்பட்டவாறான தொழிற்பாட்டு இடப்பரப்புகளாக மேலும் எல்லைவரையறுக்கப்படுகின்றன.

(அ) இடப்பரப்பு வகுதி O - மட்டுப்படுத்தப்படாத கடல்செல் சேவை;

(ஆ) இடப்பரப்பு வகுதி OR - பெயர்குறித்துநியமிக்கப்பட்ட புறப்படும் புள்ளியொன்றிலிருந்து 200 கடல் மைல்கள்வரை, மட்டுப்படுத்தப்பட்ட கடல்செல் சேவை;

(இ) இடப்பரப்பு வகுதி 1 - ஒரு காப்பான புகலிடத்திலிருந்தும் கரையோரக்கோட்டிலிருந்து 24 கடல் மைல்களினுள்ளும் கடலில் 150 கடல் மைல்கள்வரை;

(ஈ) இடப்பரப்பு வகுதி 2 - ஒரு காப்பான புகலிடத்திலிருந்தும் கரையோரக்கோட்டிலிருந்து 24 கடல் மைல்களினுள்ளும் கடலில் 60 கடல் மைல்கள்வரை;

(உ) இடப்பரப்பு வகுதி 3 - ஒரு காப்பான புகலிடத்திலிருந்தும் கரையோரக்கோட்டிலிருந்து 24 கடல் மைல்களினுள்ளும் கடலில் 30 கடல் மைல்கள்வரை;

(ஊ) இடப்பரப்பு வகுதி 4 - கலன்களின் வடிவமைப்பு வகுதிக்கு நேரொத்ததாகவுள்ள கடல் நிலைமைகளில் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட புறப்படும் புள்ளியொன்றிலிருந்து 20 கடல் மைல்கள்வரை கடலில் கரையோரக் கோட்டிலிருந்து 12 கடல் மைல்களினுள்ளான தொழிற்பாடு;

(எ) இடப்பரப்பு வகுதி 5 - கலன்களின் வடிவமைப்பு வகுதிக்கு நேரொத்ததாகவுள்ள கடல் நிலைமைகளில் பெயர்குறித்துநியமிக்கப்பட்ட புறப்படும் புள்ளியொன்றிலிருந்து 12 கடல் மைல்கள்வரை கடலில் கரையோரக் கோட்டிலிருந்து 12 கடல் மைல்களினுள்ளான தொழிற்பாடு;

(ஏ) இடப்பரப்பு வகுதி 6 - குறிப்பிடத்தக்க அலை உயரம் எந்நேரத்திலும் 2.0 மீற்றர்களை விஞ்சுவதற்கு எதிர்பார்க்கமுடியாததாகவுள்ளவிடத்து கடல் ஓரங்களினால் பாதிக்கப்படுகின்ற ஆறுகள், கழிமுகங்கள், கடற்கழிகள், விரிகுடாக்கள் மற்றும் நுழைவாய்கள்;

(ஐ) இடப்பரப்பு வகுதி 7 - குறிப்பிடத்தக்க அலை உயரம் எந்நேரத்திலும் 1.2 மீற்றர்களை விஞ்சுவதற்கு எதிர்பார்க்கமுடியாததாகவுள்ளவிடத்து கடல் ஓரங்களினால் பாதிக்கப்படுகின்ற ஆறுகள், கழிமுகங்கள், கடற்கழிகள், விரிகுடாக்கள்,நுழைவாய்கள் மற்றும் பெரிய அத்துடன் ஆழமான உள்நாட்டு ஏரிகள்;

(ஒ) இடப்பரப்பு வகுதி 8 - நீரின் ஆழம் பொதுவாக 1.5 மீற்றர்களாக அல்லது அதற்கு மேற்பட்டதாகவுள்ளவிடத்தும், குறிப்பிடத்தக்க அலை உயரம் எந்நேரத்திலும் 0.6 மீற்றர்களை விஞ்சுவதற்கு எதிர்பார்க்கமுடியாததாகவுள்ளவிடத்தும், பரந்த ஆறுகள், கால்வாய்கள் மற்றும் சிறிய உள்நாட்டு ஏரிகள்; அத்துடன்

(ஓ) இடப்பரப்பு வகுதி 9 - நீரின் ஆழம் பொதுவாக 1.5 மீற்றர்களுக்குக் குறைவாகவிருக்குமிடத்து, ஒடுக்கமான ஆறுகளும் கால்வாய்களும்.

5. இவ்வொழுங்குவிதிகளில் -

"அடிமட்டக்கோடு" என்பது, அலுவலகமுறையில் ஏற்றங்கீகரிக்கப்பட்ட பெரிய அளவிலான விளக்கப்படங்களின்மீது அடையாளமிடப்பட்டவாறு கரையோரம் நெடுகிலுமான தாழ்ந்த நீர்க்கோடு என்று பொருளாகும். ஒரு கரையோரம் நெடுகிலும், ஆறுகளின் ஆற்றுவாய்களுக்குக் குறுக்காக, அல்லது விரிகுடாக்களின் ஆற்றுவாய்களுக்குக் குறுக்காக விளிம்பிலுள்ள தீவுகளைத் தொடுக்கின்ற நேரான அடிமட்டக்கோடுகள் வரையறுக்கப்படுகின்றன;

"படகு" என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்குக் குறைவான ஒரு கலன், அல்லது 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு குறைவான ஒரு கலன் என்று பொருளாகும். படகொன்று, ஒரு படகாக, காற்றுமெத்தை வாகனமாக, பாய்மர மரக்கலமாக, அல்லது காற்றடிக்கத்தக்க கலமாக இருக்கமுடியும்;

"கரையோர நீர்ப்பரப்புகள்" என்பது, வெளிக்காட்டப்பட்ட நீர்ப்பரப்புகள்தவிர்ந்த அடிமட்டக்கோட்டின் கடல்நோக்கிய பக்கத்திலுள்ளவையும் அடிமட்டக்கோட்டிலிருந்து 24 கடல் மைல்கள்வரை நீடிப்பவையுமான எல்லா நீர்ப்பரப்புகளும் என்று பொருளாகும்;

"மரக்கலம்" என்பது, கப்பல் என்ற அதே கருத்தைக் கொண்டிருக்கும்;

"வெளிக்காட்டப்பட்ட நீர்ப்பரப்புகள்" என்பது, ஆள்புல நீர்ப்பரப்புகள் எந்த அடிமட்டக்கோட்டிலிருந்து 12 கடல் மைல்கள்வரை அளவீடுசெய்யப்படுகின்றனவோ அந்த அடிமட்டக்கோட்டின் கடல்நோக்கிய பக்கத்திலுள்ள எல்லா நீர்ப்பரப்புகளும் என்று பொருளாகும்;

"உள்ளக நீர்ப்பரப்புகள்" என்பது, ஆள்புல நீர்ப்பரப்புகள் எந்த அடிமட்டக்கோட்டிலிருந்து அளவீடுசெய்யப்படுகின்றனவோ அந்த அடிமட்டக்கோட்டின் தரைநோக்கிய பக்கத்திலுள்ள எல்லா நீரும் நீர்வழிகளும் என்று பொருளாகும்;

"நீளம்" என்பது, ஒன்றில் அடிக்கட்டையின் மேற்புறத்திலிருந்து அளவீடு செய்யப்பட்ட ஆகக்குறைந்த வார்ப்பிட்ட ஆழத்தின் 85 சதவீதத்தில் ஒரு நீர்க்கோட்டின்மீதான மொத்த நீளத்தின் 96 சதவீதம், அல்லது அந்தநீர்க்கோட்டின்மீது தண்டின் முற்பக்கத்திலிருந்து திசைதிருப்பி இருப்பின் அச்சுவரையான நீளம், இவற்றுள் எது கூடுதலாகவுள்ளதோ அது என்று பொருளாகும். அடிக்கட்டையின் சரிவுடன் வடிவமைக்கப்பட்டவொரு படகில், இந்நீளம் எந்த நீர்க்கோட்டின்மீது அளவீடுசெய்யப்படுகின்றதோ அந்த நீர்க்கோடு, வடிவமைப்பு நீர்க்கோட்டுக்குச் சமாந்தரமானதாக இருத்தல் வேண்டும்;

"கடல் மைல்" என்பது, 1852 மீற்றர்கள் என்று பொருளாகும்;

"பெயர்குறித்துநியமிக்கப்பட்ட புறப்படும்புள்ளி" என்பது, படகுகளினது சான்றிதழின் மீது குறித்துரைக்கப்பட்டவாறாக, படகின் பெயர்குறிக்கப்பட்ட புறப்படும்புள்ளி என்று பொருளாகும். இப்புள்ளி உள்ளக நீர்ப்பரப்புகளினுள் அமைந்துள்ளவிடத்து, இது,அடிமட்டக்கோட்டின் கடல்நோக்கிய எல்லையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

"சமவாயஞ்சாராக் கலன்கள்" என்பது, ஒழுங்கமைப்புச் சமவாயங்கள் ஏற்புடையனவாகாத கலன்கள், அத்துடன்/அல்லது கலன்களின் முழுமொத்தத் தொன்னளவு காரணமாக ஏற்புடையனவாகின்ற ஏற்புடையற்பாலனவான ஒழுங்கமைப்புச் சமவாயங்களிலிருந்து எந்த உள்நாட்டுக் கடற்பயணங்களுக்காகப் பணிப்பாளர் தலைமையதிபதி விலக்களிப்புகளை வழங்கியுள்ளாரோ அந்த உள்நாட்டுக் கடற்பயணங்களின்மீது மட்டுமே தொழிற்படுகின்ற கலன்கள் என்று பொருளாகும். கலனின் முழுமொத்தத் தொன்னளவு அல்லது தொழிற்பாட்டு இடப்பரப்புக் காரணமாகச் சர்வதேசக் கடலோர ஒழுங்கமைப்புச் சமவாயங்களின் பாகங்கள் ஏற்புடையனவாகவுள்ளவிடத்து, பணிப்பாளர் தலைமையதிபதியினால் விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்தாலொழிய அவை ஏற்புடையனவாகும்;

"காப்பான புகலிடம்" என்பது, படகொன்றின் காப்பை ஆபத்துக்குட்படுத்தும் சாத்தியங்கொண்ட நிலைமைகளின்கீழ் ஒரு படகினால் காப்பிடமொன்றாகப் பயன்படுத்தப்படக்கூடிய ஏதேனும் இயற்கையானரீதியில் அல்லது

செயற்கையானரீதியில் காப்பிடமாகவுள்ள இடப்பரப்பு என்று பொருளாகும். இது, எந்தக் கப்பலிலிருந்து படகானது தொழிலுக்கமர்த்தப்பட்டதோ அந்தக் கப்பலாக அல்லது ஒரு மாற்றுத் தாய்க்கப்பலாக இருக்கலாம்;

“கடல்செல்” என்பது, வெளிக்காட்டப்பட்ட நீர்ப்பரப்புகளும் கரையோர நீர்ப்பரப்புகளும் தவிர்ந்த அடிமட்டக் கோட்டின் கடல்நோக்கிய பக்கத்திலுள்ள எல்லா நீர்ப்பரப்புகளும் என்று பொருளாகும்;

“கப்பல்” என்பது, நீளத்தில் 24 மீற்றர்களுக்கு மேற்பட்ட நீரிற்செல்லும் கலனொன்று, அல்லது 150 முழுமொத்தத் தொன்னளவுக்கு மேற்பட்ட கலனொன்று என்று பொருளாகும்; அத்துடன்

“கலன்” என்பது, இவ்வொழுங்குவிதிகளில் வரைவிலக்கணங்கூறப்பட்டவாறான ஒரு கப்பல் அல்லது படகு என்று பொருளாகும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 4)


கீழேயுள்ள பட்டியல், தொழினுட்பக் கோவைகளிற் குறித்துரைக்கப்பட்டவாறு, தொழிற்பாட்டு இடப்பரப்புக்கெதிராக நீர்வழிகளின் வகுதிப்படுத்துகையின் குறுகிய படமவரைவியலையும், நீளத்தில் 24 மீற்றர்களுக்குக் குறைவான சமவாயஞ்சாராக் கலன்களுக்கான வடிவமைப்பு வகுதிகளையும் தருகின்றது.

| நீர்வழி வகுதிப்படுத்துகை | தொழிற்பாட்டு இடப்பரப்பு | வடிவமைப்பு வகுதி |
|---|---|---|
| கடல்செல் - சர்வதேச (மட்டுப் படுத்தப்படாதது) | இடப்பரப்பு வகுதி O | A |
| கடல்செல் (மட்டுப்படுத்தப்பட்டது) | இடப்பரப்பு வகுதி OR | A |
| கரையோர நீர்ப்பரப்புகள் | இடப்பரப்பு வகுதி 1 | A |
| | இடப்பரப்பு வகுதி 2 | B |
| | இடப்பரப்பு வகுதி 3 | B |
| வெளிக்காட்டப்பட்ட நீர்ப்பரப்புகள் | இடப்பரப்பு வகுதி 4 | C |
| | இடப்பரப்பு வகுதி 5 | C |
| உள்ளக நீர்ப்பரப்புகள் | இடப்பரப்பு வகுதி 6 | C |
| | இடப்பரப்பு வகுதி 7 | C |
| | இடப்பரப்பு வகுதி 8 | D |
| | இடப்பரப்பு வகுதி 9 | D |

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 4)


விளக்கப்படத்துடனான வகுதிப்படுத்துகையுடன் இலங்கையின் வரைபடம் (அடிமட்டக்கோடு அண்ணளவாக்கப்பட்டது)



## அட்டவணை II

(ஒழுங்குவிதி 4)

பெயர்குறித்துநியமிக்கப்பட்ட புறப்படும் புள்ளியாகக் கொழும்பை ஊகித்து இயல்பான இடப்பரப்பு வகுதி 4 அல்லது 5 கீழே விளக்கப்பட்டவாறாகவுள்ளது.




இடப்பரப்பு வகுதிகள் 1, 2 மற்றும் 3 என்பன, ஒரு காப்பான புகலிடத்திலிருந்து 24 கமை வரையறையினுள்ளான, ஆனால்முறையே 150 கமை, 60 கமை மற்றும் 30 கமை என்பவற்றினுள்ளான கடற்பயணங்களுக்காகவிருக்கும்.

இடப்பரப்பு வகுதி OR என்பது, பெயர்குறித்துநியமிக்கப்பட்டவொரு புறப்படும் புள்ளியிலிருந்து 200 கமை ஆரையினுள்ளான கடற்பயணங்களுக்காகவிருக்கும்.

EOG 01 - 0010